# The 24-Manai Telugu Chettiars and Their Clan Deities

**K. Ragupathi**
*Ph.D. Researcher*
*University College, Thiruvananthapuram, Kerala*

**Dr. P. Shanti**
*Professor, Department of Tamil*
*University College, Thiruvananthapuram, Kerala*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346701

**Abstract**
*The Chettiar community has been present in South India since the time of kings. From ancient times, they have been engaged in trade, import-export, and small-scale businesses. The term "Chettiar" refers broadly to a social group. Within this community, several subgroups exist, such as the 24-Manai Telugu Chettiars, Nattukottai Chettiars, and Kongu Chettiars, among others. This study focuses specifically on the 24-Manai Telugu Chettiars and their clan deities, documenting their traditions and heritage based on field research.*
***Keywords:*** *Pallaiyam — a Traditional Dish where Newly Harvested Grains are Boiled in Water and Consumed by the Community*

**Informants During Field Research**

| Name | Age | Location |
|---|---|---|
| Karthikkumamasami | 56 | Vannamadai |
| Majeswari | 47 | Vannamadai |
| Papathi | 81 | Vannamadai |
| Balakrishnan | 65 | Umpalpetti |
| Somaswathi | 60 | Umpalpetti |

# 24 மனை தெலுங்கு செட்டியார்களும் அவர்களின் குலதெய்வங்களும்

***கா. ரகுபதி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***முனைவர் ப. சாந்தி***
பேராசிரியர், தமிழ்த்துறை
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***ஆய்வுச்சுருக்கம்***

*செட்டியார் எனும் சமூகம் மன்னர் ஆட்சிகாலம் முதலே இந்தியாவின் தென்பகுதியில் காணப்பட்டு வருகிறது. அவ்வகையில் இவர்கள் பண்டை காலம் முதலே வாணிகம் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் சிறுவணிகம் செய்து வருகின்றனர். செட்டியார் என்பது ஒரு பொது சமுகமாகத் தான் காணப்படுகிறது அவ்வகையில் 24-மனை தெலுங்கு செட்டியார், நாட்டுக்கோட்டைச் செட்டியார், கொங்கு செட்டியார் என்று இன்னும் பல உட்ப்பிரிவுகள் காணப்படுகிறது. அதில் 24-மனை தெலுங்கு செட்டியார்களைக் குறித்தும் அவர்களின் குலதெய்வங்களை குறித்ததாகவும் இக்கட்டுரைகள ஆய்வின் அடிப்படையில் அமைகிறது.*

***கலைச்சொற்கள்:*** *“பல்லையம்” என்பது நவதானியங்களை சுடுதண்ணீரில் போட்டு வேகவைத்து மக்கள் சாப்பிடுவது.*

## முன்னுரை

இந்திய சமூக அமைப்பில் சாதி, சமூகம் மற்றும் குலம் போன்றவை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அந்த வகையில் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் வாழ்ந்து வந்த வணிகச் சமுகங்களில் செட்டியார் சமூகத்திற்கு சிறப்பான இடமுண்டு. தெலுங்கு மொழி பின்னணியுடையவர்கள் தமிழ்நாட்டிற்குள் குடிபெயர்ந்து வந்த போது அவர்கள் சமூக அடையாளத்தோடு மதம், பண்பாட்டு மரபுகளையும் கொண்டு வந்தனர். இவ்வகையில் 24-மனை தெலுங்கு செட்டியார் என்னும் பிரிவினர் தனித்து வத்தன்மையுடன் காணப்படுகின்றனர். இச்சமூகத்தை குறித்தும் அவர்களின் குலதெய்வங்கள் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரைகள ஆய்வின் அடிப்படையில் அமைகின்றது.

## தெலுங்கு செட்டியார்களின் வரலாற்றுப் பின்னணி

செட்டியார் சமூகத்தின் மூலத்தொழில் என்பது வாணிபத் தொழிலே அவ்வகையில் அந்நிய அரசுகளுக்கும் இந்திய அரசிற்கும் காலம் காலமாக வணிகம் செய்துவந்தனர். தெலுங்கு நாட்டுப் பகுதியில் இருந்து வணிக நோக்கத்தில் தமிழ்நாட்டிற்குள் வந்த போது அவர்கள் தெலுங்கு செட்டியார் என்ற அடையாளத்தைப் பெற்றனர். பல்லவர், சோழர் காலங்களில் வணிகர்களின் இடப்பெயர்வு அதிகரித்தது. அவர்கள் மத வழிபாட்டிலும், குடும்ப அடிப்படையிலும் 24-மனை எனும் பிரிவாக பிரிந்தனர்.

அவ்வாறு பிரிந்த 24 - மனையினரில் ஒவ்வொரு மனைக்கும் தனித்துவமான குலமரபு வழிபாடு மற்றும் ஒவ்வொரு குலத்திற்கும் ஒவ்வொரு குலதெய்வம் என்ற முறையினைப் பார்க்க முடிகின்றது.

### மனை என்ற சொல் பொருள் மற்றும் வரையறை

மனை என்ற சொல் குடும்பக்கிளை, அல்லது சமூகப்பிரிவு என்பதைக் குறிக்கிறது. செட்டியார் சமூகத்தில் ஒவ்வொரு மனையும் ஒரு வேரும் கிளையுமாக கருதப்படுகின்றது. திருமண உறவுகள் வழிபாடு, உறவினச் சுற்றம் ஆகியவை இம்மனை அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரே மனைக்குள் திருமணம் செய்வது தவிர்க்கப்பட்டது. ஒவ்வொரு மனைக்கும் தனித்துவமான குலதெய்வ கோவில்கள் இருக்கிறது. இதன் வழியாய் இவர்களின் ஒற்றுமைத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

### 24-மனை தெலுங்கு செட்டியார்கள் - பட்டியல்

வரலாற்று ஆவணங்களிலும், வாய்மொழி கூறுகளின் அடிப்படையிலும் 24-மனைக் குடியினரை 8-வீடு என்றும் 16-வீடு என்றும் குறிப்பிடப்படுகிறது.அவ்வகையில் இதனை கோத்திரம் என்றும் குறிப்பிடும் வழக்கு உண்டு. 8-வீட்டை பெண்வீடு என்றும் 16-வீட்டை ஆண் வீடு என்றும் கூறுகின்றனர். அதன் முறையே 8 - வீட்டில் இருந்து 16-வீட்டிற்கும், 16-வீட்டில் இருந்து 8-வீட்டிற்கும் பெண், ஆண் கொடுத்து உறவை வளர்த்து வருவதைக் காணமுடிகிறது. இவ்வாறு 24-மனைக் குடிகளின் பெயர்கள் பின்வருமாறு அமைகின்றது.

### 8- வீடு கோத்திரங்கள்

1. மக்கடையவர்
2. மாரட்டியவர் (எ)ரெட்டயவர்
3. சொப்பியவர்
4. பில்லிவங்கரவர்
5. தவலையவர்
6. கொரகையவர்- கண்டிகொரகையர், கஸ்தூரி கொரகையவர்
7. கோட்டயவர்- பசுபதி கோட்டயவர், பச்சையவர்
8. கவலயவர்

### 16 - வீடுகோத்திரங்கள்

1. மும்முடியார்
2. பைரவர் (எ) ராஜபைரவர்
3. கந்தவங்கரவர்
4. கணித்தியவர்
5. தில்லையவர்
6. சுப்பயவர்
7. வாஜ்யவர்
8. கெந்தியவர்
9. நலிவீரியவர்
10. பலிவீரியவர்
11. தரிசியவர்
12. கோலயவர்
13. மாதனையவர்
14. வம்மயவர் (எ) தம்மையவர்
15. சென்னையவர் (எ) பிடுகிலவர்
16. சுரயவர் (எ) சுகியவர்

### குலதெய்வ வழிபாடு

தென் இந்தியாவில் குறிப்பாக தமிழ்ச் சமூகங்களில் குலதெய்வ வழிபாடு மிகப்பழமையானது. குலத்தைப் பாதுகாக்கும் தெய்வமாகக் கருதி வாழ்க்கையில் நன்மை தீமை மட்டுமல்லாது எந்த ஒரு நிலையிலும் கைகூப்பி முதலில் வேண்டுவதும் வணங்குவதும் குலதெய்வமாக தான் இருக்கின்றது. ஒவ்வொருவருக்கும் இஷ்ட தெய்வம் என்பது ஒவ்வொருவரின் நிலையைப் பொருத்து அமையும் ஆனால் குலதெய்வம் என்பது அனைத்திற்கும் முதன்மையானதாகத் தான் காணப்படுகின்றது. இவ்வகையில் குலதெய்வம்என்பதுகுடும்ப,சமூகநலனைக் காக்கும் என்பது ஒரு நம்பிக்கையாக

இருக்கிறது. ஒவ்வொரு மனைக் குடியும் அல்லது குலத்தினரும் தங்கள் குலதெய்வத் திற்கு அலங்காரப் பொருட்கள், காணிக்கை மற்றும் பூஜைகள் செய்தும் வருகின்றனர். குலதெய்வ திருவிழா என்பது சமூக வாழ்வை ஒன்றிணைக்கும் நிகழ்வாக அமைகின்றது. இவ்வகையில் 24-மனை தெலுங்கு செட்டியார்கள் குலதெய்வத்தின் மீது அதிகப் பற்றும் பக்தியும் கொண்டுள்ளதைக் காண முடிகிறது. இவர்கள் எவ்விடத்தில் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் குலதெய்வத் திருவிழாவிலும் குலதெய்வக் கோவிலின் முக்கிய நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார்கள் என்பது குறிப்பிடதக்கதாகும். இவ்வாறு 24-மனை தெலுங்கு செட்டியார்களின் குலதெய்வத் திருவிழாவானது வருடம் வருடம் மஹாசிவராத்தி நாள் அன்று நிகழும். அவ்வகையில் மஹாசிவராத்திரியில் தங்கள் தெய்வத்திற்கு தீர்த்தம் செலுத்துவது காலம்காலமான வழக்காகக் கொண்டு உள்ளார்கள். அதன்முறையே சிவராத்திரிக்கு ஒரு வாரம் முன்னரே குலமக்கள் எல்லாரும் தீர்த்தப் பயணம் மேற்கொள்வார்கள். அந்த தீர்த்தப் பயணமானது நான்கு நாள் பயணமாக அமையும். அந்த நான்கு நாள் பயணத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோவிலுக்கு சென்று வழிபட்டு தீர்த்தப் பயணத்தின் மூன்றாம் நாள் அங்காள பரமேஸ்வரி அம்மனின் மூலஷ்தானமான மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலுக்கு சென்று அங்கு உள்ள அகினிக்குளத்தில்தீர்த்தம் எடுத்து பூஜை புரஸ்காரம் செய்து தீர்த்ததை எடுத்துக் கொண்டு தங்கள் குலதெய்வக் கோவிலை நோக்கி வருவார்கள். வரும் வேளையில் வேடசந்தூர் குங்குமக் காளியம்மன் கோவிலுக்கும் பருத்தியூர் சின்ன மன்பெரியம்மன் கொவிலுக்கும் போய் வரும் வழக்கு சில குலத்தினரிடம் காணப்படுகிறது. இறுதியாக தங்கள் குலதெய்வக் கோவிலுக்கு சிவராத்திரி நாள் காலையில் வந்தடைந்து தீர்த்ததை கோவிலில் வைத்துவிடுவார்கள்.

இதனை தொடர்ந்து சிவராத்திரி நாளன்று இரவு ஆற்றங்கரைக்கு சென்று கும்பம் நிறைத்து தங்கள் குலதெய்வதிற்கு கொண்டு வந்து ஊற்றுவார்கள் அதன் பின்னர் எல்லாமக்களும் அவர்கள் கொண்டு வந்த தீர்த்ததை தங்கள் தெய்வத்திற்கு சமர்ப்பிப்பார்கள். இதற்கே மறுநாள் விடியற்காலை ஆகிவிடும் பின்னர் குலதெய்வத்திற்கு பொங்கல் வைத்து வழிபாடு நடத்துவார்கள். அதனை தொடர்ந்து அந்நாள் இரவு “பல்லையம்” செய்து அனைத்து குலமக்களுக்கும் கொடுக்கும் முறையானது காணப்படுகின்றது. இவ்வாறு மூன்றாம் நாள் மாலை வேளையில் பூவ்வோடு எடுத்து அம்மனுக்கு வழிபடும் முறையும் காணமுடிகின்றது. இறுதியாக மூன்றாம் நாள் இரவு அம்மனுக்கு அலங்காரம் செய்து சப்பரத்தில் வைத்து ஊர்வலம் வருவார்கள் அவ்வேளையிலேயே மஞ்சள் நீர் ஆடுவார்கள். அவ்வாறு நான்காம் நாள் விடியற் காலையில் அம்மனை ஊஞ்சலில் வைத்து ஒவ்வொரு குடும்பத்தார்களும் ஆட்டுவார்கள் அவ்வாறு அம்மனை குளிர்ச்சி செய்து விட்டு தங்கள் வீட்டிற்கு சென்றுவிடுவார்கள் அவ்வாறு 24மனை தெலுங்கு செட்டியார்களில் பெரும்பான்மையான குலமக்களின் வழிபாட்டு முறை இவ்வாறே அமைகிறது.

**குல தெய்வங்கள்**

24-மனை தெலுங்கு செட்டியார்களின் குலதெய்வம் என்று சொல்லும் போது இவர்கள் அனைவருக்கும் அதாவது அனைத்து 24-மனை தெலுங்கு செட்டியார் குலத்திற்கும் பொதுதெய்வமாக அமைவது காமாட்சி அம்மன் ஆகும். இதனை தொடர்ந்தே ஒவ்வொரு கோத்திரத்துக்கும் குலதெய்வம் அமைவதைக் காணமுடியும். அவ்வகையில் 16-வீட்டில் உள்ள கோத்திரங்களுக்கும் 8-வீட்டில் உள்ள

கோத்திரங்களுக்கும் தனித் தனியே குலதெய்வம் அமைகின்றது.

### 16-வீட்டின் குலதெய்வங்கள்

- "மும்முடியார்" குலமக்களுக்கு - மகாதானபுரம் மகாலட்சுமி அம்மன்.
- "கப்பவர்" குலமக்களுக்கு- வசந்த நாராயணப் பெருமாள்.
- "வம்மயவர்" குலமக்களுக்கு - காவிரிப் பாளையம் அங்காளிஸ்வரி அம்மன்.
- "கோலயவர் குலமக்களுக்கு - பருத்தியூர் சின்னம்மன் பெரியம்மன், கொடையூர் குங்குமக் காளியம்மன், வேடசந்தூர் குங்குமக் காளியம்மன், அய்யம் பாளையம் பொட்டியம்மன்.
- "வாஜ்யவர்" குலமக்களுக்கு - லால்குடி ஆட்சியம்மன்.
- "நலிவீரியவர்" குலமக்களுக்கு - விருது நகர் சின்னமாரி பெரியமாரி.
- "தில்லையவர்" குலமக்களுக்கு - அம்பலித்தை வீரமாதையம்மன்.
- "சுரயவர்" குலமக்களுக்கு- வாலிச் செட்டிபட்டி அண்ணாமலை ஈஸ்வரர்.
- "தரிசியவர்" குலமக்களுக்கு - கூவாக்காப் பட்டி அகினியம்மன்.
- "கனிந்தியவர்" குலமக்களுக்கு - தெலுக்குப் பட்டி பட்டதரசியம்மன்.
- "மாதளையவர்" குலமக்களுக்கு - கிருஷ்ணாபுரம் தாமரையம்மன்.
- "புலியவர்" குலமக்களுக்கு- அரவணை அங்காளப் பரமேஸ்வரியம்மன்.

என்று 16-வீட்டு மக்களின் குலதெய்வம் அமையும் முறையை காணமுடிகிறது.

### 8-வீட்டின் குல தெய்வங்கள்

- "மக்கடையவர்" குலமக்களுக்கு- மூக்குத்தறிசம் பாளையம் சீனிவாசம் பெருமாள், அழகாபுரியின் வரதராசப் பெருமாள்.
- "கொரகையவர்; குலத்தில் "கண்டி கொரகையவர்" மக்களின் - நாட்டுக்கல் பாளையம் அங்காளப் பரமேஸ்வரி அம்மன்,
- "கஷ்தூரி கொரகையவர்" மக்களின் - கணக்கம்பட்டி அக்கமாரீஸ்வரி.
- "ரெட்டையவர்" குலமக்களின் ஸ்ரீரங்கம் அங்காளி,
- "மாரட்டையவர்" குலமக்களின் இராசு காப்பட்டி காமாட்சியம்மன்.
- "பில்லிவங்கயவர்" குலமக்களின் நாட்ச்சிப்பட்டி பாலாயியம்மன் பாப்பாயியம்மன் பட்டாயியம்மன்.
- "சொப்பியவர்" குலமக்களின் மடப்புரம் கண்ணிமார்சாமிகள்.
- "தவலையவர்" குலமக்களின் வேலம் பூண்டி பெத்தையன் வீரமாத்தியம்மன்.

என்று 8-வீட்டு மக்களின் குலதெய்வம் அமைகின்றது. இவ்வாறு 24மனை தெலுங்கு செட்டியார்களின் குலதெய்வங்கள் நிறைய தனித்தன்மைகளுடன் அமையும் முறை காணமுடிகிறது.

### முடிவுரை

24மனை தெலுங்கு செட்டியார் சமூக அமைப்பு தமிழக சமூக வரலாற்றில் சிறப்பு பெற்றது. குல தெய்வ வழிபாடும் அவர்களின் மத அடையாளத்தையும் சமூக ஒற்றுமையையும் உறுதிப்படுத்துகிறது. இன்று நகர்ப்புற வாழ்வியலும், வெளிநாடுகளிலும் வாழும் தெலுங்கு செட்டியார்கள் தங்கள் குல தெய்வ வழிபாட்டைத் தொடர்வது அவர்களின் பண்பாட்டு வேர்கள் எவ்வளவு வலிமையானது என்பதை வெளிப்படுத்துகிறது.

### களஆய்வின் போது தகவல் தந்தவர்கள் விபரம்

1. கார்த்திக்குமராசாமி 56 வயது வண்ணாமடை
2. ராஜேஸ்வரி 47 வயது வண்ணாமடை
3. பாப்பாத்தி 81 வயது வண்ணாமடை
4. பாலகிருஷ்ணன் 65வயது உரல்பட்டி
5. சரஸ்வதி 60 வயது உரல்பட்டி